# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1974/20 - 2016 ජුලි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.07.07

*1974/20 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**தென் மாகாண மாகாண சபை**

*தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (திருத்த) நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தென் மாகாண மாகாண சபைச் சட்டத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

*1. இந்நியதிச் சட்டம், 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (திருத்த) நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இந்நியதிச் சட்டத்திற்கு ஆளுநரால் 2016.06.03 ஆந் திகதி முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் 2016.06.03 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தென் மாகாண கைத் தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டத் தின் 4 ஆம் பிரி வினைத் திருத்து தல்.*

*2. (இந்நியதிச் சட்டத்தின் இதனகத்துப்பின்னர் "நியதிச் சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது, அதன் (அ) என்னும் பந்தியினை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*"(அஅ) அவர்களுடைய கைத்தொழில்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் மாகாணத்தினுள் தொழில் அதிபர்களினால் சங்கங்களையும் கழகங்களையும் அமைப்பதனை ஊக்குவித்தல் ;".*

*நியதிச் சட்டத்தின் 6ஆவது பிரி வினைத் திருத்துதல்.*

3. நியதிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவானது (17) ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(18) அவர்களுடைய கைத்தொழில்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் மாகாணத்தினுள் தொழில் அதிபர்களினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் சங்கம் அல்லது கழகத்திற்கான பதிவுச் சான்றிதழை பதிவு செய்யலாம் அத்துடன் வழங்கலாம்."

*ஒவ்வாமை ஏற் படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

தெனகம விதாரனகே ரோஹண ப்ரிய உபுல்,
மீன்பிடித்தொழில், மிருக உற்பத்தி மற்றும் அபிவிருத்தி,
சூழல் விவகாரம், கிராமிய கைத்தொழில், மின்சாரம், கிராமிய
மற்றும் தோட்ட அடிப்படை வசதிகள் அபிவிருத்தி
அமைச்சர்
தென் மாகாண மாகாண சபை.

மீன்பிடித்தொழில், மிருக உற்பத்தி மற்றும் அபிவிருத்தி,
சூழல் விவகாரம், கிராமிய கைத்தொழில், மின்சாரம், கிராமிய
மற்றும் தோட்ட அடிப்படை வசதிகள் அபிவிருத்தி அமைச்சு,
இரண்டாவது மாடி,
தஷினபாய,
லபுதுவ, காலி,
2016, யூன் 06.

7 - 888

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.